கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

மலர்: 97 இதழ்: 35
புரட்டாசி 16 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

# வெள்ளிவிழாக் கொண்டாடும் திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட நல்லாயர்

இலங்கையின் பொறுப்புள்ள கத்தோலிக்க ஆயர்களுள் திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஆயராகிய பேரருள்திரு இக்னேசியஸ் கிளெனி, இ. ச. ஆண்டகை ஒருவரே பிறநாட்டைச் சேர்ந்தவராவர். அவர் இம்மாதம் 21–ந்தேதி தமது ஆயர் அபிஷேகத்தின் வெள்ளி விழாவைக் கண்டுகளிக்கப் போகின்றார்.

இக்னேசியஸ் கிளெனி ஆண்டகை மெக்சிக்கோ தேசத்தில் 1907-ம் ஆண்டு மாசி மாதம் 5-ந்தேதி சீரும் சிறப்புமுள்ள ஓர் உத்தம கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தார். இவருக்கு ஓர் இளைய சகோதரியும் உண்டு. ஆயருக்கு ஏறக்குறைய 8 வயது நடக்கும்போது இவரது குடும்பம் வேதகலாபனை காரணமாக மெக்சிக்கோவைவிட்டு வெளியேறி, ஐக்கிய அமெரிக்காவில் விளொறிடா மாகாணத்தில் குடியேறவேண்டி நேர்ந்தது. திரு. இக்னேசியஸ் கிளெனி அங்குள்ள புனித சிங்காரயரின் கல்விக்கழகத்தில் உயர் கல்வி கற்றுமுடித்ததன்பின் யேசு சபையில் சேர்ந்தார். பின்பு உவாஷிங்ரனிலுள்ள புனித மிக்கேல் கல்லூரியில் மெய்யியல் பயின்றார். பின்பு மூன்று வருடங்களுக்கு நியூ ஓர்லியன்ஸ் பட்டணத்தில் யேசுசபைக்குருமார் நடாத்தி வரும் உயர்தரப் பள்ளியில் கல்வி கற்பித்தார்.

அவ்வேளை இலங்கையில் திருமறைத் தொண்டாற்ற விரும்பியதால் 1935-ல் திருகோணமலை மேற்றிராசனத்திற்கு அனுப்பப்பட்டார். ஒருவருடம் மட்டக்களப்பில் தங்கியிருந்தபின் இறையியல் கற்க இந்தியாவில் கேர்சியோங் என்னும் இடத்திலிருந்த யேசுசபைக் குருமடத்திற்கு அனுப்பப் பட்டார். அங்கு தமது படிப்பைச் சித்திகரமாக முடித்து, 1938ஆம் ஆண்டு கார்த்திகை 21இல் குருப்பட்டம் பெற்றதுமல்லாமல், பின்பு இறையியலில் பாண்டித்தியமும் எய்தினர். இலங்கைக்குத் திரும்பியதும் கண்டியிலிருந்த பாப்பரசரின் குருமடத்தில் இறையியல் ஆசிரியராகவும், 1944 இல் அதே குருமடத்தின் தலைவராகவும் நியமனம் பெற்றார். அவர் தமது கடமைகளைத் திறம்பட நிறைவேற்றி வரும்வேளை 1947ஆம் ஆண்டு ஆடி 10-ம்நாள் திருகோணமலை மறைமாவட்டத்தின் ஆயராகப் பரி[illegible]பாப்பரசரால் நியமிக்கப்[illegible]ற்றார்.

இக்னேசியஸ் கிளெனி ஆண்டகை திருகோணமலை மேற்றிராசனத்தைப் பொறுப்பேற்றபோது அது இலங்கையின் கிழக்குக் கரையோரத்திலே 5,000 சதுரமைல் விஸ்தாரமுள்ள காடுகள்நிறைந்த பரந்த பூமியாக விளங்கிற்று. வடக்கில் திருகோணமலையும், நடுவில் மட்டக்களப்பும், தெற்கில் கல்முனையுமாக மூன்று கணிசமான பட்டணங்கள் மட்டுமே அதில் இருந்தன. அது இலங்கையின் ஐந்தில் ஒரு பாகத்தை அடக்கியிருந்தபோதிலும், ஐந்துவீதத்துக்குக் குறைந்த மக்கள் தொகையே அதில் வாழ்ந்து வந்தது. ஏறக்குறைய 16,000 கத்தோலிக்க மக்கள் 70-க்கு மேற்பட்ட சிற்றூர்களில் சிறுசிறு கூட்டங்களாகச் சிதறுண்டு வாழ்ந்து வந்தனர். முழு மேற்றிராசனமும் 13 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. 18 யேசுசபைக் குருமாரும், 14 மேற்றிராசனக் குருமாரும் கத்தோலிக்க மக்களுக்கு ஞானப்பணி புரிந்துவந்தனர். ஆண்களுக்கென இரு ஆங்கில பாடசாலைகளும், பெண்களுக்கென மூன்று ஆங்கில பாடசாலைகளும் மட்டுமே இருந்தன. அவை முறையே யேசுசபைக் குருமாராலும்,

(தொடர்ச்சி 3-ம்பக்கம்)

## மானிலத்தைக் காப்பவரே, வாழ்க! வாழ்க!!

புன்னகையை இதழோரம் அவிழ்த்துக் கொஞ்சும்
புதுச்சொல்லால் தமிழ்பேசி அருள்புரிந்து
மன்னவா மக்களின் குறைகள் நீங்க
மறைபரப்பும் மானிலங்கள் பலவும் சென்றாய்
அன்போடு என்புருக எமக்காய் வாழும்
அண்ணலே "இக்னேசியஸ் கிளெனி"த் தந்தாய்
தன்னலத்தைக் கருதாது நாளும் இந்த
மானிலத்தைக் காப்பவரே, வாழ்க! வாழ்க!!

* * *

புடம்போட்ட தங்கே புனிதக் குன்றே
பூமியெலாம் பொன்னாகும் புதுமை கண்டேன்
கடமையுடன் கண்ணியமும கட்டுப்பாடும்
கர்த்தரின் பேரருளும் கருணைநோக்கும்
நடையினிலே நற்சேவை செய்யும் எண்ணம்
நாளெல்லாம் நாம்வாழ வழியே செய்தீர்
அடங்கிடுமோ சொல்லதனில் உந்தன் புகழ்தான்
(நல்) ஆயனே நீர்பல்லாண்டு வாழ்க! வாழ்க!!

* * *

உறவோடு உறவாக எங்கள் வாழ்வில்
ஒன்றாகக் கலந்தவரே அன்புத் தந்தாய்
சிறகோடு சிறகாக எமை வளர்த்து
எங்கள் சிந்தனையில் தங்கிவிட்ட திருவுருவே
மறந்திடுமோ மறைமாவட்டம் உந்தன்பேரை
மானிலம் தழைக்க நல்மாரியானய்
மறவாத மக்கள்நாம் இங்குள்ளமட்டும்
வாழ்த்துதலும் போற்றுதலும் வாழும்! வாழும்!!

புலவர் ஏ. டபிள்யு. அரியநாயகம்

## மகாவந். இக்னேஷஸ் கிளெனி ஆண்டகைஅவர்களின் மேற்றிராணித்துவ வெண்பொன் விழா



பாதுகாவலன் 8-7-72இல் அறிவித்தபடி திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயராகிய மகாவந். இக்னேஷஸ் கிளெனி ஆண்டகை அவர்கள் மேற்றிராணியாராக அபிஷேகிக்கப்பட்ட 25 ஆண்டுகள் நிகழும் புரட்டாசி 21-ந்தேதி பூர்த்தியாகின்றன. பகிரங்கொண்டாட்டங்கள் மட்டக்களப்பு பொதுமைதானத்தில் மறுநாள் 22-ந்தேதி மாலை 5–30மணிக்கு நடைபெறும். அவ்வேளை பொது உபசரிப்பும், கூட்டுத் திருப்பலியும் இடம்பெறும். எம்நாட்டின் எல்லா மேற்றிராணிமாரும் எல்லா மேற்றிராசனங்களிலுமிருந்து திரளான குருமாரும், துறவிகளும், மற்றோரும் கொண்டாட்டங்களில் பங்குபற்றவிருக்கின்றனர். யூபிலித் தினமாகிய 21–ந்தேதி கிளெனி ஆண்டகை தம் மேற்றிராசனத்தைச்சேர்ந்த நான்கு டீக்கன்மாருக்குக் குருத்துவாபிஷேகம் அளிப்பார்.

யூபிலிநாயகர் ஆண்டகை அவர்கட்குக் காவலன் தனது இதயம்கனிந்த வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் இச்சுபதினத்தில் சமர்ப்பிக்கின்றான்.

## மியூனிச் பரிதாபக் கொலைகளால் பாப்பரசரின் மனவாட்டம்

சென்றவாரம் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் உலகில் நடந்து வரும் வன்செயல்கள் உலகை எங்கே இட்டுச் செல்கின்றனவோ என்று பிரலாபித்ததை நேயர்கள் அறிவர். அதன்பின் ஒருவாரத்துக்குள்ளேயே பரிசுத்த தந்தைக்கு மேலும் மனவாட்டமளிக்கும் சம்பவங்கள் நடந்தேறிவிட்டன. மியூனிச்சில் சர்வதேச போட்டிகள் நடந்துவந்தபோது வன்செயல்காரரான சில அரபுக்கொமாண்டோக்களால் இஸ்ரேயேல் மக்கள் பதின்மூவர் பரிதாபமான முறையில் மரணமெய்திய செய்தியைக் கேட்டுப் பாப்பரசரும் அகில உலகமுமே திக்குத்திசை தெரியாதவராய் கலக்கம் மேலிட்டுள்ளனர். செய்தியைக் கேள்விப்பட்ட பரிசுத்ததந்தை பெருமூச்செறிந்து "ஆ! பரிதாபக்கொலைகள்!" எனப் பிரலாபித்தார். உலக தலைவர்களின் அநுதாபச் செய்திகள் இஸ்ரேயேல் தலைவர் திருமதி கோல்டா மெயர் அம்மணி அவர்களின் காரியாலயத்தில்குவிகின்றன.

## ஒற்றுமைக் கருதினல் வில்டர்பிருண்ட் இங்கிலாந்து செல்வது ஏன்?

ஒற்றுமைப் பாதையின் குறுக்கேயிருந்த இருபெரும் விஷயங்களுள் ஒன்று ஓரளவு பரிசீலனை செய்யப்பட்டு முடிந்தது. அது சற்பிரசாத திருஅருட்சாதனமாம். இது பற்றிய முடிவுகளும் அறிவிக்கப்பட்டுவிட்டன. தற்போது "குருத்துவம்" ஆலோசிக்கப்பட்டுவருகிறது. பலவார ஆலோசனைகள் முடிந்தன. மேலும் பல சிக்கலான விஷயங்களை ஆராய இருபகுதியினரும் இத்தாலிய கிராமமாகிய கசாடா என்னும் கிராமத்தில் இம்மாதம் கூடுகின்றனர். இந்தக்கூட்டம் தொடங்கி ஒரு மாதகாலத்தின் பின் ஒற்றுமைக் காரியாலய அதிபர் கருதினல் வில்டர் பிருண்ட் அடிகளார் இங்கிலாந்துக்கு விஜயம் செய்து அங்கிளிக்கன் சபைத்தலைவர் றும்சே அடிகளாரின் விருந்தினராக சில தினங்கள் தங்கித் திரும்புவார். நியமிக்கப்பட்ட கூட்டு ஆய்வுக் குழு இதுவரையும் அடைந்துள்ள சித்தியைக் கணித்துக் கொள்ளவும், மேலும் கையாளப்படவேண்டிய முறைகளை ஆராய்வுமே அடிகளாரின் விஜயமெனக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தண்டிக்கும் ஆற்றல் இருப்பினும், மனமிரங்கிப் பொறுத்துக் கொள்ளும் பண்பே சிறந்தது.

*சத்தியவேத பாதுகாவலன்*

## புதுமைகளும் விசுவாசமும்

சில நாட்களுக்குமுன் விசுவாசத்தினல் நோய்களைக் குணப்படுத்தும் ஓர் இயக்கம் பிரபல்யமடைந்திருந்தது. இவ்வியக்கத்தினல் நடத்தப்பட்ட கூட்டங்களில் பெருந்தொகையான மக்கள் பங்குபற்றியதைக் கண்டோம். அவர்களில் பலர் வேடிக்கைபார்க்க வந்தவர்கள். மற்றவர்கள் தங்களை வருத்தும் நோய்களிலிருந்து விடுபட ஒருவழிதேடி வந்தவர்கள், அவர்களிற் சிலர் குணமடைந்ததாகவும் கூறப்பட்டது. இதில் எவ்வளவு உண்மை இருக்கிறது. அவர்கள் மெய்யாகவே குணமடைந்தார்களா? நிரந்தரமான ஆரோக்கியம் பெற்ருர்களா? என்றெல்லாம் ஆராய்வது எமது நோக்கமல்ல. அம்மக்கள் புதுமைகளை எதிர்பார்த்தார்கள் என்பதுதான்.

இன்று புதுமைகளில் பெரும்பாலான மக்களுக்கு நம்பிக்கையில்லை. அவை இயற்கைக்கு மாருனவைஎனக் கருதுகிருர்கள். அல்லதுபோனல் புதுமைகளெல்லாம் அக்காலத்தில் நடந்திருக்கலாம்; ஆனல் இக்காலத்தில் அப்படியெல்லாம் நடக்கமுடியாதுஎன்று நினைக்கிருர்கள்.

கிறிஸ்துநாதருடைய வாழ்வு புதுமைகள் நிறைந்தது. அவரைச் சூழவிருந்த மக்களின் அவிசுவாசத்தைப் போக்க இந்தப் புதுமைகள் வேண்டியிருந்தன. புதுமைகளைக் கண்டும் அவரை விசுவசியாதவர் பலரும் அன்று இருந்தனர், பரலோகம் சென்றபின்னும் திருச்சபையில் அவரது பிரசன்னத்தை உறுதிசெய்யும்படிக்குப் புதுமைகள் பலநிகழ்ந்தன.

புதுமைகள் இறைவனைப்பொறுத்தமட்டில் இயற்கைக்கு மாருனவை அல்ல. அப்படியானல் அக்காலத்தைப்போல் இன்றும் ஏராளமான புதுமைகளை ஏன்அவர் செய்யவில்லை? இறைவன் இன்றும் புதுமைகளைச் செய்துகொண்டுதான் இருக்கிருர். ஆனல் மக்கள்மனதில் போதிய விசுவாசம் இல்லாமையால் அவற்றைப் புதுமைகளென ஏற்றுக்கொள்ளாதிருக்கிருர்கள். அவை இயற்கையான நிகழ்ச்சிகள்தான் என்று தமக்குள் கூறிக்கொள்கிருர்கள். புதுமையைக் காணுமுன்பே கிறிஸ்துநாதரின் ஆற்றலை விசுவசித்த நூற்றுக்கதிபதியைப் போலவோ, கானனிய பெண்ணைப் போலவோ ஆழ்ந்த விசுவாசத்தை இன்று காணக்கூடியதாக இருக்கிறதா? ஆயினும் அவர்களுக்குச் செய்ததைப் போலவே எமக்கும் புதுமைகளைச்செய்ய இறைவன் ஆயத்தமாக இருக்கிருர்.

ஆனல் நாமோ மனித முயற்சி ஆற்றல் ஆகியவற்றில் கூடிய விசுவாசத்தை வைக்கிருேம். விசுவாசத்தின் அளவுக்கு ஏற்ப உலகை வெற்றிகொள்வோம் என்ற வாக்கை மறந்துவிடுகிருேம். மனிதனின் திறமையும் முயற்சியும் பயன்படுத்தப்பட வேண்டுமென்ருலும் இறைவனில் பூரணமான விசுவாசம் இல்லாவிட்டால் அவருடைய வல்லமையை உணரமுடியாது. நாம் விசுவாசிகள் என்று கூறிக்கொள்ளுகிருேம் எங்கள் விசுவாசம் உறுதியும் ஆழமும் உள்ளதா? இன்றைய உலகின் தாத்தினல், சூழ்நிலையால் எமது விசுவாசம் பாதிக்கப்படாமல் இருக்கின்றதா? உண்மையின்மேற் பற்றுதலும், இறைவனில் விசுவாசமும் அருகிவரும் இந்நாட்களில் நாம் அவற்றுக்காகப் போராடவும், தியாகங்களைச் செய்யவும் ஆயத்தமாக இருக்கிருேமா?

விசுவாசம் தளர்ந்துவிட்டால் அந்தப் பலவீனம் கிறிஸ்தவ வாழ்வின் கட்டுக்கோப்பையே குலைத்துவிடும். ஏனெனில் விசுவாசமே அதன் முதுகெலும்பாகும்.

## குருமார் கன்னியரின் உடை

உலகின் சகல பாகங்களிலுமுள்ள குருமார், சன்னியாசிகள், கன்னியர்கள் யாவருக்கும் அண்மையில் வத்திக்கான் அதிகாரிகள் விடுத்திருக்கும் அறிக்கையில் அவர்களது உடுப்பு விஷயமாக அறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கிருர்கள். செய்யும் வேலையின் சௌகரியத்தின் காரணமாகவோ, சுகாதார முறைகளின் காரணமாகவோ இப்போது அணிந்துவரும் உடுப்புகளில் மாற்றங்கள் செய்ய வேண்டுமானல், தமது புனித நிலையை பொதுநிலை மக்கள் இலகுவாக அறிந்து கொள்ளத் தக்க முறையில் அவர்களது உடுப்பு அமையவேண்டும் என அவ்வறிக்கை கூறுகின்றது.

# தேவ அழைத்தல்களுக்காக வேண்டிக்கொள்வோம்

இன்று திருச்சபையின் உளத்தைக் கலங்கவைத்து, அதற்குப் பெருங்கவலையைத் தந்துகொண்டிருக்கும் ஒரு விடயம்பற்றி அஃதாவது, உலகில் குருத்துவ, சந்நியாச, கன்னிகா அழைத்தல்கள் வெகுவாகக் குன்றியிருப்பது பற்றிச் சில வரைந்து, இந்தக்குறை நிறைவெய்துமாறு அதிகமாகச் செபஞ் செய்யும்படியாகவும், அதிகமான தேவ அழைத்தல்களைக் கண்டுகொள்ளுமாறு இறைமக்கள் அனைவரும் தங்களால் இயன்றவரை அருமுயற்சி எடுக்கும்படியாகவும மிகுந்த ஆர்வத்துடன் எல்லோரையும் அழைக்கின்ருேம்.

இற்றைக்கு இரண்டொரு தலைமுறைகளுக்குமுன் உலகின் வேதபோதகர்களான மிஷனரிமாரில் 85 சதவிகிதத்தினரையும் ஐரோப்பிய நாடுகளே தந்துகொண்டு வரலாயின. ஆனல், இன்று அந்நாடுகளே தங்கள் சொந்தக் கோவில்களையும், சுயஸ்தாபனங்களையும் நிருவகிப்பதற்குப்போதிய குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமார் இல்லாது தவிக்கின்றமையாலே தேவைப்படும் வேதபோதகர்களான மிஷனரிமாரில் மிகவும் குறைந்த தொகையினரையே தந்துதவுகின்றன. தென்னமெரிக்கா மட்டும் தனது வேதவிசுவாசத்தை இழந்து போகாதிருக்குமாறு உடனடியாக 1,30,000 குருமார் ஆவசியகம் தேவைப்படுகின்ருர்கள்.

அதனல் இன்றுள்ள இந்த மாபெரும் பிரச்சினையை எதிர்கொண்டுள்ள சத்தியமாதாவாகிய திருச்சபை தேவ அழைத்தல்களின் தொகை அதிகரிக்கு முகமாக அகில முழுவதற்குமான ஓர் இயக்கத்தில் ஈடுபடுமாறு குருத்துவ, சந்நியாச, கன்னிகா சபைகளுக்கெல்லாம் நேர்முகமாக ஓர் அழைத்தலை விடுத்திருக்கின்றது. அமலோற்பவமரியநாயகி சபை, சலேசியன்சபை முதலாம் சபைகள் இன்னுமே பாந்து விருத்தியடைந்து வருகின்றன என்பதை அவற்றின் புள்ளிவிபரங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன ஆனல், திருச்சபையின் தேவைகளும், அப்போஸ்தலிக்க வேண்டுகோள்களுமே மா தேவஅழைத்தல்கள் பன்மடங்கு பதினயிர மடங்காக அதிகரிக்க வேண்டியதன் ஆவசியகத்தை எடுத்துக் காட்டுகின்றன.

எத்தகைய அப்போஸ்தலிக்க அலுவலுக்கும், அழைத்தலுக்கும் நாம் கையாடத்தகுந்த முதன்மையும், முக்கியமுமான ஆயுதம் செபமே. "உண்மையாகவே அறுப்பு மிகுதியாயிருக்கிறது; வேலையாட்களோ கொஞ்சமாயிருக்கிருர்கள்; ஆகையால், தனது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி வேளாண்மையின் எசமானை மன்ருடுங்கள்" என்று நமது ஆண்டவர் தாமே வசனித்திருக்கின்ருர். செபமானது உதாரசிந்தையுடைய அநேக இளம் உள்ளங்களிலே தேவ அழைத்தலின் விதைகளை எளிதில் விதைக்கக்கூடியது. குருத்துவ, சந்நியாச, கன்னிகா வாழ்க்கைக்குரிய தேவ அழைத்தல்களையுடைய—சிறந்த தேவபக்தியுள்ள பிள்ளைகளைக்கொண்ட உத்தம குடும்பங்களைப் பிறப்பித்து ஆசீர்வதிக்கும்படியாய் மரியன்னை வழியாக மன்ருடிவரும் அநேக குடும்பங்கள் தங்கள் அனுதின குடும்ப செபமாலையிலே ஒரு காரணிக்கத்தை அதற்கென ஒப்புக்கொடுக்கும் உசிதமான வழக்கத்தைக் கொண்டிருப்பதுபாராட்டத்தக்கது.

தேவனுக்கும், அவருடைய திரு ஊழியத்திற்குமாகத் தங்கள் குடும்பத்திலே ஒரு பிள்ளையை ஒப்புக்கொடுப்பது ஒரு தகப்பனுக்கோ அன்றேல் தாய்க்கோ ஒரு பெருந் தியாகமாகலாம். ஆனல், அப்பிள்ளை ஒருநாள் திருப்பலி பீடத்தில் நிற்பதையும், தூயவர், தூயவரென்று தேவதூதர்களும் இறைமக்களும் துதித்துக் கொண்டாடும் இறைமகன் யேசுவைத் தனது கரங்களில் ஏந்தி நிற்பதையும் கண்குளிரக்கண்டு பரவசம்மடையும் போது அவர்களுக்குண்டாகும் பெருமகிழ்ச்சிக்கு இப்பூமண்டலத்தில் எந்தவித அகமகிழ்ச்சியுமே ஈடாக மாட்டாது.

ஆகவே, குருமடங்களுக்கும், சந்நியாச, கன்னிகா மடங்களுக்கும்தேவஅழைத்தல்கள் அமோகமாகக் கிடைக்கும்படி செபதபங்களாலும், தியாகங்களாலும் பரலோகவாயிலை முற்றிகையிடுமாறு இறை பக்தர்கள் அனைவரையும் மிகுந்த ஆர்வத்துடன் அழைக்கின்ருேம்.

**[ அருட்திரு. ஓறேலியஸ் மாஸ்சியோ அடிகளார் S. D. B. எழுதிய கட்டுரையைத் தழுவி வரையப்பட்டது ]**

## என் வேண்டுதல் இதுவே !

அன்பின் தெய்வீக துணிவை ஆண்டவனே ! எனக்கு
தா ! என் வேண்டுதல் இது
வே !

உன் சித்தத்தை நான்
அறிக்கையிட ; நிறைவேற்ற
அதன் நிமித்தமே துன்புறத்
துணிவை எனக்குத் தா !

எல்லாவற்றையும் கைநெகிழ
வும் எல்லோராலும் கைநெ
கிழப்படும் பொழுதும் தெய்
வீகதென்பு தா !

இடுக்கண் சூழ் இவ்வாழ்
வில் என்னைத் திடப்படுத்தி
இன்னல்களால் எனக்கு
மகிமை அளி !

அனுதினமும் என்னையே
உனக்குப் பலியிடும் அபூர்வ
மான மனோ நிலைக்கு

அடியேன் ஏறிவர ஆண்ட
வனே ! என்னை வழி நட
த்து.

சிநேகத்திற்கு சிறப்புத்தரும்
நம்பிக்கையை இறைவா
எனக்கு ஈந்திடு.

உன்னை நான் இறைஞ்சுவது
இதுவே ! சாவிற்கும் சீவன்
அளிக்கும் சக்தியுள்ள நம்பிக்
கையை எனக்குத் தா !

அநித்தியத்தின் அழகில்
மறைந்திருக்கும் சக்திகளை
முறியடித்து— நான் வெற்றி
பெற.

வாதனைகளை வாஞ்சையுடன்
ஏற்று வதைப்போரைப் பழி
வாங்காது விட,

வாதனைகள் என்னை வந்தடை
யும் வேளையில் கண்ணியமாய்—வல்லவனே என்னை
வழிநடத்து.

மூலம்—
இரவீந்திரநாத தாகூர்.
மொழி பெயர்ப்பு
**மேரி றோசலீன் சூசைப்பிள்ளை.**

கத். சிங்கள எழுத்தாளர்

## கௌரவிக்கப் பட்டார்

பிரபல்ய சிங்கள கத்தோலிக்க எழுத்தாளராகிய திரு. ஹியூபேட் திசனயகா அவர்கள் சிங்கள இலக்கிய வளர்ச்சிக்கு அவர் எழுதி வரும் நூல்களினல் செய்து வரும் அரிய சேவைக்காக இலங்கை அரசாங்கம் அவரைக் கௌரவிக்க இவ்வாரம் மாத்தளையில் நடைபெற்ற "சாகித்ய" வைபவத்தில் ஆயிரம் ரூபாப் பங்குள்ள ஒரு பரிசு அளித்திருக்கின்றது. திரு. திசனயகா அவர்கள் சிறுபிள்ளைகளின் உபயோகத்துக்குரிய நூல்கள் பல எழுதியுள்ளார். இவை இந்நாட்டின் பலமதத்தவர்களும் உபயோகித்து வருகின்றனர். அத்துடன் கத்தோலிக்க நூல்கள் பலவும், சமயவழிபாட்டு மொழி பெயர்ப்புகள் பலவும் இவாது கத்தோலிக்க சேவையின் அரிய தானங்களாகும். பெரியார் அவர்கள் சிங்கள பாஷையில் பல கவிகளும் இயற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி விழாக் கொண்டாடும்

## திருகோணமலே—மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் நல்லாயர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கார்மேல்சபைக் கன்னியராலும் நடத்தப்பட்டு வந்தன. மேற்றிராசனமும், பங்குகளும் வருமானமில்லாத நிலேயில் இருந்தமையால் குருமாரின் தாபரிப்பும், ஏனைய தேவைகளும் வெளிநாட்டு உதவிகொண்டே பூர்த்திசெய்யப்பட்டு வந்தன. சுதேச குருமாரைப் பயிற்றுதற்கு மேற்றிராசனத்தில் ஒரு குருமடமும் இருக்கவில்லே.

கிளெனி ஆண்டகை திருகோணமலே ஆயராக நியமனம் பெற்றபின் முதல்முறையாக உரோமாபுரிக்குச் சென்று பரி. 12-ம் பத்திநாத பாப்பரசரைச் சந்தித்தபோது, மேற்றிராசனக் குருமாரை உருவாக்குவதே ஓர் ஆயரின் பிரதான கடமைகளுள் ஒன்று என்று அவருக்கு வற்புறுத்திக் கூறினர். ஆகவே, கிளெனி ஆண்டகை பரி. தந்தையின் ஆணேயை நிறைவேற்றுவதையே தமது ஆயர் பணியின் பிரதான குறிக்கோளாகக் கொண்டார். அதற்கெென அமெரிக்காவில் நிதி திரட்டி மேற்றிராசனத்துக்குத்திரும்பி வந்தவுடன் திருகோணமலேயில் புனித வளனரின் சிறிய குருமடத்தை நிறுவினர். இக்குருமடம் இற்றைவரை 22 குருமாரை மேற்றிராசனத்திற்கு அளித்துள்ளது. இன்னும் 18குருமாணவர்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் பெரிய குருமடங்களில் பயிற்சிபெற்று வருகின்றனர்.

மேற்குறிப்பிட்ட 22 குருமாரோடு, வேறு மேற்றிராசனங்களுக்கெனப் பட்டம் பெற்ற பல குருமாரும் திருகோணமலே மேற்றிராசனத்தில் வந்து சேர்ந்தமையால், 1947-ல் 14ஆக இருந்த மேற்றிராசன குருமாரின் தொகை 1972இல் (இடைப்பட்ட காலத்தில் இறந்தவர்களே நீக்கி) 41ஆக அதிகரித்துள்ளது. அன்றியும், மேற்றிராசனத்தின் பிரதான பதவிகளாகிய மேற்றிராசன முதல்வர், வட்டார முதல்வர்கள், பிரதான பங்குக்குருமார் என்னும் பதவிகளே இப்போது மேற்றிராசன குருமாரே வகிக்கின்றனர். அத்துடன் ஆயரின் ஆலோசனைக் குழுவிலும் குருமார் மன்றத்திலும் அவர்களே பெரும் பான்மையான இடங்களேப் பெற்றுள்ளனர். ஒரு சுதேச துணே ஆயரும் நியமிக்கப்பெற்று கடமையாற்றிவருகின்றார்.

மேற்றிராசனத்தின் பொறுப்பை ஏற்கத் தகமைவாய்ந்த, மனத்திருப்தியுள்ள குருமார் குழுவை உருவாக்குவதில் கிளெனி ஆண்டகை உண்மையில் வெற்றியடைந்துள்ளார். இலங்கையிலுள்ள மேற்றிராசனங்களுள் பின்தங்கியதும், கஷ்டங்கள் நிறைந்ததுமான திருகோணமலே மேற்றிராசனத்திற்கென அபிஷேகம் செய்யப்பெற்ற குருமார் தங்கள் கடமைகளே நன்மனதோடு நிறைவேற்றி வருகிறார்களென்றால், வசதிகள் கூடிய மற்ற மேற்றிராசனங்களில் பட்டம்பெற்ற குருமார் இம் மேற்றிராசனத்திற் சேர்ந்து தொண்டாற்றி வருகிறார்களென்றால், கிளெனி ஆண்டகைஅவர்கள் உள்ளத்தில் தூண்டிவிட்ட அப்போஸ்தல பணி ஆர்வமே அதற்குக் காரணமென்று கூறவேண்டும்.

கிளெனி ஆண்டகையின் 25வருட ஆட்சிக்காலத்தில் திருகோணமலே மேற்றிராசனத்தில் கத்தோலிக்க மக்களின் தொகை இருமடங்குகளுக்குமேல் அதிகரித்துள்ளது இப்போதைய தொகை 36,657ஆகும். புதுக் குடியேற்ற திட்டங்களில் சிதறுண்டுவாழும் கத்தோலிக்க மக்களின் ஞானத் தேவைகளேப் பூர்த்திசெய்யும் பொருட்டு புதுப்புதுக் கிறிஸ்தவ நிலேயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பழைய பங்குகள் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு 1947-ல் 13ஆகஇருந்த பங்குகளின் தொகை 1972-ல் 25 ஆகியுள்ளது. மேற்றிராசனத்தின் இருபெரும் பாகங்களேயும் நெருங்கிய முறையில் இணேக்கும் பொருட்டு 1967-ல் மேற்றிராசனத்தின் பெயர் "திருகோணமலே-மட்டக்களப்பு மேற்றிராசனம்" என்று மாற்றப்பட்டது.

கத்தோலிக்க பாடசாலேகள் 1960-ல் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டதன் காரணமாக மேற்றிராசனத்திற்குப் புதுப் பிரச்சினேகள் எழுந்தன. கத். பிள்ளேகளின் தொகை 5விகிதத்திற்குக் குறைய இருந்தமையாலும், அவர்கள் பெரும்பாலும் பாடசாலேகளில் சிதறுண்டு கல்விகற்று வந்தமையாலும் அவர்கட்குப் பாடசாலேகளில் மறைக்கல்வி ஊட்டுதல் பெரும் கஷ்டமான நிலேயை அடைந்தது. ஆகவே, அவர்கட்கு இனிமேல் பங்குகளிலேயேமறைக் கல்வி அளிக்கவேண்டிய நிலே ஏற்பட்டது.

இலங்கையின் கிழக்குக் கரையோரப் பகுதி பின்தங்கிய, புறக்கணிக்கப்பட்ட பகுதியாகும். இங்கு வறுமையும் வேலேயில்லாமையும் அதிகம். தகுந்த இல்லிடமின்றிக் கஷ்டப்படுவோரின்தொகை ஏராளம். இத்தகையோர் தங்கள் கஷ்ட நிலேயிலிருந்து விடுதலே பெற வழியின்றித் தவிக்கின்றனர். இவர்கட்குச் சமூக அப்போஸ்தலபணி அதிகம் தேவைப்படுகின்றது. அது சிறந்தபயன் அளிக்கும்என்ற நம்பிக்கையுமுண்டு.

இத்தகைய புதிய அப்போஸ்தல பணிகளேச் சித்திகரமாய்ச் செய்வதற்குத் திண்டிவனத்தில் விசேஷ பயிற்சி பெற்ற இல்லறத் தூதுவர் பலபங்குகளில் குருமாருக்கு உறுதுணேயாகநின்று தொண்டாற்றி வருகின்றனர். இத்துடன் பல துறவற சகோதரிகளின் சபைகள் ஆயரின் அழைப்புக்கிணங்கித் தங்கள் மடங்களேப் புதிதாக மேற்றிராசனத்தில் நிறுவி இப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இப்போது மேற்றிராசனத்தில் பெண்களுக்குரிய துறவறசபைகள் ஏழு உண்டு. சமூகசேவை நிலேயங்களும், இளேஞர் நிலேயங்களும் திருகோணமலேயிலும், மட்டக்களப்பிலும் நிறுவப்பட்டுள்ளன. தொழில்நுட்ப, தொழிற்பயிற்சி நிலேயங்கள் மட்டக்களப்பில் தொடக்கப்பட்டுள்ளன.

இறைமக்களின் கிறிஸ்தவ வாழ்வும் பக்தியும் சாதாரண வழிகளில் மட்டுமல்ல, ஞான ஒடுக்கம், திருயாத்திரை போன்ற சிறப்பான வழிகளாலும் பேணி வளர்க்கப்பட்டு வந்துள்ளன. கிளெனி ஆண்டகையின் ஆட்சிக்காலத்தில் ஆயித்தியமலே, நாவற்குடா, தேற்றாத்தீவு, இங்கினியாகலே முதலிய இடங்களில் மக்களின் மனதைக் கவருகின்ற புதிய யாத்திரைத் தலங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

இக்னேசியஸ் கிளெனி ஆண்டகை ஒரு பிறநாட்டவராய் இருப்பினும், இந்நாட்டு மக்களின் தேவைகளேயும், அபிலாசைகளேயும் நன்கறிந்து அவற்றை நிறைவேற்றப் பெருமுயற்சி எடுத்துவந்துள்ளார். ஆகவே அவர் பிறசமய மக்களின் நன்மதிப்பையும், ஏராளமாகப் பெற்றுள்ளார். திருகோணமலே-மட்டக்களப்பு மேற்றிராசனத்தின் குருமாரும், துறவியரும், கத்தோலிக்க மக்களும் அவர்மட்டில் ஆழ்ந்த வணக்கமும் பேரன்பும் நன்றியும் உள்ளவர்களாக விளங்குகிறார்கள். அவர் ஆன்ம வாஞ்சையும், இழகிய உள்ளமும், அன்பாதரவும், பரந்தமனப்பான்மையுமுள்ள ஒரு புனித ஆயர்என்று அவரைப் பாராட்டுகின்றனர். அவரது வெள்ளிவிழாவுக்கு மகா மேன்மைதங்கிய கருதினுல் கூறே ஆண்டகை அவர்கள் அனுப்பிய ஆசிச்செய்தியில் அவரது கனிவைப்பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார், "கனிவு அவரில் காட்சியளிக்கின்றது. அவரது புன்முறுவலில் அது பிரதிபலிக்கின்றது. அவரது மெல்லிய குரல் அதைத் தாங்கி வருகின்றது. ஓர் இரகசியப் பண்பு அதன் உண்மைத்தனத்தைக் காட்டி, சார்புள்ளவர்களே வசீகரிப்பதற்கு மட்டுமன்றி, எதிர்ப்புள்ளவர்களே அடிபணியச் செய்யவும் அதற்கு வலிமை அளிக்கின்றது."

மகா வந்தனேக்குரிய இக்னேசியஸ் கிளெனி ஆண்டகை அவர்கள் இன்னும் பல்லாண்டுகட்குத் திருகோணமலே-மட்டக்களப்பு மேற்றிராசனத்தின் ஆயராகத் தொடர்ந்து நற்பணிபுரிய வேண்டுமென்று இறைவனே வேண்டி கல்லாசி கூறுகின்றோம்.

பேரருள்திரு
வ. தியோகுப்பிள்ளே ஆண்டகை,
துணேஆயர்.

---

வரகவி திரு. லோ. அமிர்தநாதபிள்ளே
(சின்னத்துரை) அவர்களின்

## நூறுவதாண்டு ஜெயந்தி விழா நினேவுக் கட்டுரை

யேசுநாத சுவாமி திருப்புகழ், லூர்துமாமரி தோத்திரப் பாமாலே முதலிய பலப்பல நூல்களின் ஆசிரியர் வரகவி அமிர்தநாதபிள்ளே அவர்கள் மாதகலேப் பிறப்பிடமாகக்கொண்டு வாழ்ந்தவர். இவர் வ. லோப்புப்பிள்ளே அவர்களின் புத்திரராவர். திரு. லோப்புப்பிள்ளேயவர்கள் வல்லுவெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரெனவும் மாதகலில் மணம் புரிந்தவர் எனவும் அறியக்கிடக்கிறது. இவரது புத்திரருள் ஒருவராகிய திரு. வ. லோ. அமிர்தநாதபிள்ளே அவர்கள் மாதகல் தைரியநாத அச்சியந்திர சாலேயைத் தாபித்தவரென்பது குறிப்பிடத்தக்கது. திரு. அமிர்தநாதபிள்ளே அவர்களின் நூறுவதாண்டு ஜெயந்தி நாளே முன்னிட்டு அவரின் செயற்கருஞ்செயல் குறித்துச்சிறிது சிந்திப்பது பொருத்தமானதே.

திரு. வ. லோ. அமிர்தநாதபிள்ளேயவர்கள் கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலேயின் அதிபராக இருந்து அரும்பணியாற்றிய வண. சிங்கராயர் ஓ. எம். ஐ., எம். ஏ. (லண்டன்) அவர்களின் அருமைத்தந்தையார் என்பதைக் குறிப்பிடுவதன் மூலம் அவரை இன்னுரெனச் சுட்டிக்காட்டுவது இலகுவாகும் எனக்கருதுகிறேன். திரு. அமிர்தநாதபிள்ளே அவர்களின் கவிதா சக்தியை வெளியுலகம் நன்கு தெரிந்துகொள்ளாமலிருந்தது என்பது புனேக்துரையன்று. இலக்கிய வரலாற்று ஆசிரியர்களிற் பலருக்கு அத்தகைய கவிஞர் ஒருவர் இருந்திருக்கிறார் என்பது தெரியாமலிருந்ததென்பதும் உண்மையே. திரு. அமிர்தநாதபிள்ளேயவர்கள் பாடாமல் இருக்கமுடியாத ஒருவர் என்பதும் அவரது தோத்திரப்பாமாலேகள் பக்திரசம் சொட்டுபவை என்பதும் வெளிப்படையானவை. இத்தகைய புலவர்கள் தமது சுயவிளம்பரத்தை விரும்பி வாழ்வதில்லே. ஆனுல், புலவரவர்களின் புத்திரர்களோ அன்றி உற்றார் உறவினரோ அல்லது மாதகற் கிராமத்தினரோ இவரின் அரிய படைப்புகளே உலகமறியப் பரப்ப முன்வராமை கவலேக்குரியதே.

திரு. அமிர்தநாதபிள்ளே அவர்கள் எழுதிய ஆயிரக்கணக்கான பாடல்கள் இன்னும் வெளிவந்தில. அர்ச். லூர்துமாமரி தோத்திரப் பாமாலே என்றொரு நூல்மட்டும் இற்றைக்கு ஏறத்தாழ இருபத்தைந்தாண்டுகளுக்குமுன் வெளி வந்துள்ளது. இத்தோத்திரப் பாமாலேயில் ஒரு அந்தாதியும் சில விருத்தப் பாக்களும், சொல்லணிச் செய்யுட்கள் சிலவும் பிறவும் இடம் பெற்றுள்ளன. இவருடைய, சொல்லணிகள் பலவற்றிக்கு இலக்கியமாயமைந்த செய்யுள்கள் வியப்பூட்டுந் தன்மையின. நாகபந்தம், இரட்டை நாகபந்தம், சதுர்நாகபந்தம், அட்டநாகபந்தம், மூரசபந்தம் முதலாய அணிகளேயும் அவற்றுக்கு உதாரணச் செய்யுள்களேயும் மாறனலங்காரம், தண்டியலங்காரம் முதலிய நூல்களிற் காண்கிறேம். இத்தகைய கவிகளேப் புனேவது மிகுதியுஞ் சிரமமானவேலே. இச்சிரமம் வாய்ந்த பணியைத் திரு. அமிர்தநாதபிள்ளே சிறப்பாகச் செய்து முடித்திருப்பது அவரின் கவிதா விசாலத்தை ஐயந்திரிபுகளுக்கு இடமின்றி எடுத்துக்காட்டுகிறது.

கவிதையிற் பொருளுக்கே முக்கியத்துவம் கொடுப்போரும் சொல்லுக்கே முக்கியத்துவம் கொடுப்போரும் எனப் புலவர்கள் இருவேறு வகையினர். இந்த இருவேறு வகையினும்படாது சொல்லுக்கும் பொருளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து மொழியுயர்வும் பொருளுயர்வும் நாடுவார் இன்னெருவகையினர். திரு. அமிர்தநாதபிள்ளே அவர்களின் கவிதைகளில் சொல்லே முக்கிய இடம் பெற்றுள்ளது என்பது எனது கருத்து. சந்தக் கவிகள் சந்தஞ்சிதையாமலும் யாப்பிலக்கணம் பிறழாமலும் இயற்றப்பட்டிருக்கின்றன.

மாதகல் துறைமுகத்தின்கண் திருக்கோயில் கொண்டிருக்கும் அர்ச். லூர்துநாயகிபால் புலவருக்குள்ள ஈடுபாட்டை அவரியற்றிய தோத்திரப்பாமாலே நன்கெடுத்துக் காட்டுகிறது. இவ்வாறே இவரியற்றிய யேசுநாத சுவாமி திருப்புகழ் சந்தக்கவியமைப்பதில் இவருக்குள்ள திறமையை வெளிப்படுத்துகிறது. அருணகிரிநாதர் திருப்புகழை அடியொற்றியே இத்திருப்புகழ் அமைக்கப்பட்டதென்பதை இரண்டையும் ஒப்பவைத்து நோக்குவோர் இலகுவாக அறிந்துகொள்வர்.

திரு. அமிர்தநாதபிள்ளே அவர்கள் தமிழ் மொழிக்கும் கிறிஸ்தவ சமயத்துக்கும் ஆற்றிய அரும்பணிகளேப் பேறுடையனவாக்கத் தமிழறிஞர்கள் விசேடமாகக் கிறிஸ்தவ தமிழறிஞர்கள் முன்வருவார்களாக. கவிஞரின் புகழ் பல்லூழி நிலேபெறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவையிற் சிந்திய யேசுவின் இரத்தம்

ஒளிவிடும் முத்துக்களல்ல, பளிரிடும் இரத்தினங்களல்ல, மங்காது இலங்கும் தங்கமல்ல, நிலையில்லாத நிலவுலகமல்ல, மரியன்னையின் மாசில்லாத இருதயத்தில் நின்று ஊறிய யேசுவின் திருவிரத்தமே விலையேறப்பெற்ற அரும் பெரும் திரவியமாம்.

பூங்காவனத்தில் யேசுவின் திருவிருதயம் மிகுந்த அவஸ்தையுற்றுத் தேங்கி வெயர்வையாய்ச் சொரிந்த இரத்தம்; கற்றூணில் யேசுவின் திருமேனி கசையடிகளாற் கிழிய வடிந்தஇரத்தம்; முள்முடி சிரசில் அழுத்தியதால் யேசுவின் திருமுகமலரில் நிறைந்து வழிந்த இரத்தம்; புற்களிலும் கற்களிலும் முட்களிலும் கொலைஞரின் உடைகளிலும் சிதறிவடிந்த தேவ செம்மறியின் இரத்தம்; சிலுவையில் யேசுவின் கரங்களிலும், கால்களிலும் இருந்து பீரிட்டு வழிந்தோடிப் பாவப் பூமியைக் கழுவிய இரத்தம்; உலகமக்களின் மீட்புக்காகப் பாவங்களின் பரிகாரமாகச் சிந்தப்பட்ட யேசுவின் திரு இரத்தமே. திவ்விய யேசு சிந்திய செவ்விய திருஇரத்தமே மானிடரின் வணக்கத்துக்கும் ஆராதனைக்கும் பாத்திரமானது.

"அவர் சித்தப்படி யேசுக் கிறீஸ்துநாதருடைய சரீரத்தை ஒருமுறை ஒப்புக்கொடுத்ததினாலே நாம் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறோம் (எபி. 10 : 10). தேவரீருடைய சித்தத்தை நிறைவேற்ற மனிதருடைய பாவங்களுக்காக எனது இரத்தத்தைச் சிந்தி உத்தரித்துத் தேவரீருடைய நீதிக்கு யோக்கியமான பரிகாரஞ் செய்யவும், இதோ ஆயத்தமாய் இருக்கிறேனென்று மாசற்ற கன்னிமரியாயின் உதரத்தில் சுதனாகிய சர்வேசுரன் மனித சுபாவத்தைத் தரித்துக் கொண்டவுடனே தம்முடைய பிதாவை நோக்கிப் பிரார்த்தித்தார். பிதாவாகிய சர்வேசுரன் தமது திருச்சுதனுடைய விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டதினாலே அவருடைய திருஇரத்தப் பலியினால் நாம் கழுவப்பட்டுப் பரிசுத்த மாக்கப்பட்டிருக்கிறோம்" என்று வேதாகம உரை நமக்கு விளக்கந் தருகிறது.

"கடவுள் ஒளியாய் இருக்கிறார்; அவரிடத்தில் இருள் அற்பமேனும் இல்லை." "அவர் பிரகாசத்தில் இருப்பதுபோன்று நாமும் பிரகாசத்தில் நடப்போமானால், நாம் அந்நியோன்னிய ஐக்கியமுள்ளவராய்ச் சீவிப்பதுமன்றி, அவருடைய குமாரனாகிய யேசுக்கிறிஸ்துவின் இரத்தம் நம்மைச் சகல பாவத்திலும் நின்று சுத்திகரிக்கும்" என்று புனித அருளப்பர் தமது முதல் நிருபத்திற் கூறியிருக்கிறார். ஆதலால் நாம் பாவ இருள் நீங்க இறைவன் நமக்கு அளித்த அரிய கற்பனைகளை அனுசரித்து இறையன்பிலும், பிறரன்பிலும் வளர்ந்து பரமபிதாவைப்போல் பரிசுத்தராய் வாழ்ந்து ஒளியின் பாதையிலே வழிநடந்தால், நமக்குள் ஒற்றுமையும் சமாதானமும் நிலைக்க, கிறீஸ்துவின் இரத்தம் நமது சகல பாவங்களையும் சுத்திகரிக்கும்.

யேசு சிலுவையில் இரத்தஞ் சிந்தித் தமது பிதாவுக்குத் தம்மைப் பலியாகக் கொடுத்து நம்மைப் பாவம், நரகம், பசாசின் அடிமைத்தனம் ஆகிய தீங்குகளில் நின்று நம்மை மீட்டு இரட்சித்தார். அவர் அரியபாடுகளை அனுபவித்தபொழுது தமது உதிரங்களைச் சிந்தினார். கற்றூண் வாதையில், சிலுவையின் பாதையில் அகில உலகிற்கும் அணையாத தீபமாய் நின்ற அவரது திருமேனியில் வடிந்த இரட்சணியத்தின் இரத்த ஊற்றுக்கள் ஆறாய் ஓட, மனுக்குலமனைத்தும் மனமுருகி மனஸ்தாபக் கண்ணீர் சொரிந்து இறைவனை நாட, தமது விலையேறப்பெற்ற இரத்தம் அனைத்தையும் சொரிந்தார்; நேசச்சுவாலை மூண்டெரியும் இதயத்தைத் திறந்தார். "சேவகன் ஒருவன் ஈட்டியினால் யேசுவின் திருவிலாவைத் திறந்ததும் அதினின்று இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டன. எனவே யேசு தமது கடைசித்துளி இரத்தத்தையும் மானிடரின் மீட்புக்காகச் சொரிந்தார். தேவ குமாரனாகிய யேசுவின் அன்புக்கு இணையான அன்பு உலகினில் உண்டோ?

மாசற்ற மரியன்னையின் இதயத்தினின்றுஊறிய யேசுவின் இரத்தம் உண்மையாகவே மிகவும் ஏராளமாய் இருந்தது. அதை நமக்கு அன்றுதொட்டு ஞானஸ்நானம், பாவசங்கீர்த்தனம், பீடத்தின் நித்தியபலி ஆகியவை வேண்டிய அளவு பிரமாதமாகத் தருகின்றன. அவருடைய நித்திய பிதாவுக்குப் பிராயச்சித்தஞ் செய்ய அவருடைய ஒரு துளி கண்ணீர், ஒரு சொட்டு விலையேறப்பெற்ற இரத்தம் போதுமானதாய் இருந்தது ஆயினும் எங்களுக்காக மரிப்பதிலும் சிலுவையில் அறையுண்டு மரணங்களுள் எல்லாம் கொடூர மரணத்தை அடைவதன்றி மற்றஎதுவும் அவருடைய நேசத்தைத் திருப்திப்படுத்ாது. இத்தகைய அணைகடந்த அன்புக்கு நாம் செய்யும் பிரதியன்பென்ன? பாவங்களையே பலமுறையும் புரிகின்றோமன்றோ?

மாசற்ற மரியாயின் திரு உதரத்தினின்று எடுக்கப்பட்டுப் பாவிகளின் மீட்புக்காகவும், பாவங்களின் பரிகாரமாகவும் சிந்தப்பட்ட யேசுவின் விலையேறப்பெற்ற திருஇரத்தமே! உன்னை ஆராதிப்பதற்கு என் முழு ஆன்மாவையும் தாழ்த்துகிறேன்; என் இருதயத்தை இரட்சிக்கவேண்டிய தேவ அருட்கொடைகளை ஈட்டியாற்குத்தித் திறக்கப்பட்ட உமது திருஇருதயத்தில் இருந்து சொரிந்தருளுமாறு யேசுவே உம்மை மிகவும் தாழ்ந்து பணிந்து வேண்டுகிறோம் என்று பரிவுடன் பிரார்த்திப்போம்.

எங்கள் அன்பான யேசுவே! தேவரீர் எங்களுக்கு அனுக்கிரகம் புரிந்து எங்கள் ஆபத்து அவசரங்களிலும், வேதனை விதனங்களிலும் எங்கள் ஆத்தும நேத்திரங்களாகிய புத்தி, மனம், சித்தம் எனும் திரிகரணங்களையும் முழு இருதயத்துடனே உயர்த்தி எங்கள் பிதாவே எங்கள் கர்த்தாவான சர்வேசுரனே எங்களுக்கு இந்த அவசரங்களில் உதவிசெய்யும்; எங்களைக் கைவிடாதேயும் என்று உறுதியான விசுவாசம் நம்பிக்கையோடே வேண்டிக் கொள்ள, நீர் எங்களுக்காகச் சிந்தின திருஇரத்தத்தைப் பார்த்துக் கிருபைபண்ணியருளும்—ஆசிரியர்: எவ்.எஸ்.சி.

## கத்தோலிக்க சினிமாப்படக் காரியாலயம்

மகாஜன தொடர்புச் சாதனங்கள் கத்தோலிக்க சேவைக்கு உகந்த முறையில் துரிதமாக அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர் அண்மையில் செய்து கொண்ட விண்ணப்பத்துக்கு இணங்க ஸ்ரீலங்காவில் பெரு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கத்தோலிக்க பிரசுரங்கள், நூல நிலையங்கள், வானொலி நிகழ்ச்சிகள் யாவும் புதிய மெருகுடன் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. அத்துடன் இக்காலத்தில் மக்கள் கவனத்தைப் பெரிதும் கவரும் சினிமாப் படத்துறையையும் காலத்துக்கேற்ற முறையில் உபயோகிக்க முயற்சிகள் கையாளப்படுகின்றன. அண்மையில் அகில இலங்கை சுற்றுலாக் கத்தோலிக்க சினிமாப் பட நிறுவனம் நிறுவப்பட்டதை நேயர் அறிவர். இதைத் தொடர்ந்து கத்தோலிக்க சினிமாப்படக்காரியாலயம் கொழும்பு மாநகரில் நிறுவும் கருமங்களை ஆலோசிக்கச் சென்ற வாரம் இத்துறையில் நாட்டமுள்ள பிரபலகத்தோலிக்கர்கள் கொழும்பில் ஒன்றுகூடி ஆலோசனைகள் நடத்தியிருக்கின்றனர்.

## கரு.டெல்அக்துவா காலமானர்

நற்சுகத்துடன் இத்தாலிய யாத்திரிகர் கோஷ்டிக்குச் தலைமைதாங்கி லூர்துபதிக்குச்சென்ற ரோமாபுரி மேற்றிராசன பரிபாலகர் கருதினால் டெல் அக்குவா அடிகள் லூர்து கெபியில் யாத்திரிகர்கள் மத்தியில தலைமை தாங்கி ஆலயத்துக்குச் சென்று கொண்டிருக்கும்போது திடீரென மார்படைப் பினால் தாக்கப்பட்டு ஸ்தலத்திலேயே மரணமானர். ஆலயத்துக்கு அணிவகுத்துச் சென்ற பல்லாயிர யாத்திரிகரது ஒய்யார பவனியைப் பார்த்து "எமது விசுவாசத்தின் சிறப்பு இங்கு காணப்படுகின்றது" எனக் கூறிய வார்த்தைகளே இவரது இறுதி வார்த்தைகளாம். வறிய இத்தாலிய தொழிலாளர் குடும்பத்தில் பிறந்த டெல் அக்குவா அடிகளுக்கு இறக்கும்போது வயது 68. இவரது மரணத்தினால் கருதினால் குழுவினரின் தொகை 116 ஆகின்றது.

## கத்தோலிக்கரின் நன்முயற்சி

கொழும்பு அ[illegible]மேற்றிராசனத்தின் விசாரணைப் பங்குகளின் ஒன்றாகிய கோட்டைப் பிரிவில் (நுகெகொட) புனித தோமையார் கோவில் விசாரணைப் பங்குக் குருவானவர் வண. ஹென்றி ரொட்றிகோ அடிகளாரின் பெரு முயற்சியின் பயனாக அப்பகுதிக் கத்தோலிக்க இளைஞர் மாத்திரமன்றி பிறசமய இளைஞரும் தமது வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு ஒரு பரிகாரம் கண்டுகொண்டனர். குருவானவர் கோவிலுக்குச் சொந்தமான பலஏக்கர் நிலங்களில் விவசாயப் பண்ணை ஒன்றை நிறுவி நவீன விவசாய முறைகளை இளைஞர் பயலத்தக்கதாக அரசாங்க உத்தியோகஸ்தரை வரவழைத்துப் பயிற்சி அளித்து வருகின்றார். மேலும் கோழி வளர்த்தல், நெசவு வேலை செய்தல், சமையற் கல்வி பயிலுதல் ஆகிய முயற்சிகளும் அங்கே நடைபெறுகின்றன.

## நன்றித் துதி

பிறேக்நகர புனித பாலயேசுவின் அருளாலும், சகாயமாதா, சஞ். சூசையப்பர், புனிதர்களான யூதாததேயு, பிரான்சிஸ் சவேரியார், பதுவை அந்தோனியார், றீத்தம்மாள், சிறிய புஷ்பமான தெரேசம்மாள், மருதமடுச் செபமாலைமாதா, வியாகுல மாதா ஆகியோர் மூலமும் திருமுகாதரிடம் கேட்ட மன்றாட்டு அனுகூலமானதற்கு நன்றித்துதியாக இதை விளம்பரம் செய்கிறேன்.

—ஓர் அடியாள்

✠

## ஆசிரியர் க.வஸ்தியாம்பிள்ளை

அவர்கள்
அமரத்துவமடைந்த

### 11-ம் வருட மரண ஞாபகம்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 14-2-1909 | 21-9-1961 |

நினைவு நாள்: 21-9-72

புலம்பல்

மைந்தரெமை எடுத்தணைத்த
கரங்கள் எண்ணி
மாசற்ற வதனமதின்
மலர்ச்சி எண்ணி
சிந்தனையைப் பிழிந்தெடுக்கும்
செயல்கள் எண்ணி
சீராட்டிப் புரந்துவந்த
சிறப்பை எண்ணி
நொந்தழுது புலம்புகிறோம்
கருணைத் தந்தாய்!
நொடிப்பொழுதும் உமை
மறவோம்
மோட்ச விட்டின்
கந்தமலர்ச் சோலையினில்
இனிதே வாழக
கர்த்தனடி நித்தமியாம்
பணிகின்றோமே.

"சீவியத்தில் இவரை நாம் நேசித்தோம்; நம்முடைய செபங்களால் கர்த்தரின் வீட்டுக்குள் இவரை நாம் இட்டுச்செல்லும் வரை கைவிடாதிருப்போமாக

சமாதானத்தில் இளைப்பாறுவாராக

இவரது ஆன்மசாந்திக்காக எதிர்வரும் 22ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்குப் பரிசுத்த அடைக்கலநாயகி ஆலயத்தில் ஒரு துக்கப்பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ருவிங்கிள் ஸ்ரார்,
நம். 11, மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

✠

## திரு. அதிரியாம்பிள்ளை பிலிப்புப்பிள்ளை

அவர்கள்
அமரத்துவம் அடைந்த

### முதல் வருட நினைவுதினம்

சில்லாலைப்பதி வாசரும் எங்கள் அருமைத் தந்தையுமான பிலிப்புப்பிள்ளை அவர்கள் இறைவன் திருவடியடைந்த முதலாம் ஆண்டு நினைவுதினம் எதிர்வரும் 23-9-72இல் வருகிறது. அன்றுதினம் அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகச் சில்லாலை ஆரோக்கியமாதா தேவாலயத்தில் ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இதைக் கண்ணுறும் சங்கைக்குரிய குருமார், கன்னியர், துறவிகள், இனசனர், அன்பர்கள் எல்லோரும் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளும்படி தாழ்மையாய்க் கேட்கிறோம்.

இங்ஙனம்,
பி. யோசேப்பு (மடுக்கோயில்) பி. சந்தியாப்பிள்ளை, பி. அந்தோனிப்பிள்ளை, பி. மேரி மெக்ரலின், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

[A 89/72]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம்ஆண்டு புரட்டாசி மாதம் 16-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300; தாபிதம்: 1876;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org